வணக்கம்

ஆகாஷ்வாணி-புதுச்சேரி

மாநிலச் செய்திகள்

வாசிப்பவர்-மலர்விழி

தேதி: 20.06.2025 நேரம்: மாலை 6.10 மணி

---

*தலைப்புச் செய்திகள்*

வாழ்வின் எல்லாத் துறைகளிலும் மாற்றுத் திறனாளிகளை ஊக்குவிக்க வேண்டியதன் அவசியத்தை, குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு வலியுறுத்தி உள்ளார்.

தேசிய ஜனநாயகக் கூட்டணி, வளர்ச்சியின் சின்னமாகவே திகழ்வதாக, பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார்.

பிரதமர் திரு. நரேந்திர மோடியின் பங்கேற்புடன், விசாகப்பட்டினத்தில் நாளை நடைபெற உள்ள, சர்வதேச யோகா தின விழாவிற்கான ஏற்பாடுகள், முழு அளவில் செய்யப்பட்டு வருகின்றன.

புதுச்சேரிக்கும், காரைக்காலுக்கும் இடையே, கடல் சாகசப் பயணம் மேற்கொண்டு திரும்பி உள்ள என்சிசி குழுவினரை, இன்று துணை நிலை ஆளுநர் திரு. கைலாஷ்நாதன் கொடியசைத்து வரவேற்றார்.

--------------------------

*முர்மு (14)*

வாழ்வின் எல்லாத் துறைகளிலும் மாற்றுத் திறனாளிகளை ஊக்குவிக்க வேண்டியதன் அவசியத்தை, குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு வலியுறுத்தி உள்ளார். உத்தராகண்ட் மாநிலம் டேராடூனில் உள்ள, தேசிய மாற்றுத் திறனாளிகள் அதிகார மேம்பாட்டுக் கழகத்தில் இன்று நடைபெற்ற நிகழ்ச்சியில், மாணவர்களிடையே உரையாற்றிய அவர், நவீன தொழில்நுட்பங்கள் மூலம், மாற்றுத் திறனாளிகள் எல்லாத் துறைகளிலும் முக்கிய பங்களிக்க முடியும் என்றார். வழக்கமாக குழைந்தகளுக்கு கிடைக்கும் கல்விக்கான எல்லா வாய்ப்புகளும், மாற்றுத்திறனாளிகளுக்கும் கிடைப்பதை உறுதிப்படுத்த, தேசிய கல்விக் கொள்கையில் முக்கியத்துவம் அளிக்கப் பட்டுள்ளதாக, அவர் தெரிவித்தார். முன்னதாக டேராடூனில், **ராஷ்ட்ரபதி நிகேதன்**, மற்றும், **ராஷ்ட்ரபதி தபோ வனத்**தை, குடியரசுத் தலைவர் திறந்து வைத்தார். **ராஷ்ட்ரபதி உதயான்-** தோட்டம் அமைக்கும் பணிகளுக்கும் அவர் அடிக்கல் நாட்டினார்.

--------------------------

*மோடி-பீகார்* 1 (16)

தேசிய ஜனநாயகக் கூட்டணி, வளர்ச்சியின் சின்னமாகவே திகழ்வதாக, பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார். இன்று பீகார் மாநிலம் சிவான் மாவட்டத்தில், பொதுக் கூட்டம் ஒன்றில் உரையாற்றிய அவர், கடந்த 11 ஆண்டுகளில், தமது அரசு பீகார் மாநிலத்தை, வளம், மற்றும், துரிதமான வளர்ச்சிப் பாதையில் இட்டுச் சென்றுள்ளதாக கூறினார்.

**அனைவருக்கும் வளர்ச்சி-அனைவருக்கும் ஆதரவு** என்ற அடிப்படையில், தாம் செயல்பட்டு வரும் நிலையில், காங்கிரஸ், ஆர்ஜே.டி ஆகிய எதிர்கட்சிகள், **குடும்பத்திற்கு ஆதரவு-குடும்பத்திற்கு வளர்ச்சி** என்ற அணுகுமுறையுடன் செயல்பட்டு வருவதாக, திரு. நரேந்திர மோடி குற்றம் சாட்டினார். அரசியல் சாசன சிற்பி அண்ணல் அம்பேத்கர் மீது இவர்களுக்கு நம்பிக்கை இல்லை என்றும், அண்மையில் அண்ணல் அம்பேத்கார் அவமதிக்கப் பட்டதற்கு இதுவே காரணம் என்றும் அவர் கூறினார். புலம்பெயர் தொழிலாளர்களின் சின்னமாக இருந்த பீகாரில், தேசிய ஜனநாயகக் கூட்டணி ஆட்சியில்தான், இளைஞர்கள் புலம்பெயர் நிலையில் இருந்து விடுபட்டதாக அவர் கூறினார். பிரதமரின் பீகார் பயணம் குறித்து கூடுதல் விவரங்கள்…..

**(வாய்ஸ்)**

*மோடி-பீகார்* 2 (12)

**(வாய்ஸ்)**

முன்னதாக, பாடலிபுத்ரா மற்றும் கோரக்பூர் இடையிலான வந்தே பாரத் எக்ஸ்பிரஸ் ரயிலை, பிரதமர் திரு. நரேந்திர மோடி கொடியசைத்து தொடக்கி வைத்தார். பீகாரின் **மார்ஹவ்ரா லோக்கோமோட்டிவ்** ஆலையில் தயாரிக்கப்பட்டு, மேற்கு ஆப்ரிக்க நாடான கினியாவிற்கு ஏற்றுமதி செய்யப்படும் ரயில் எஞ்சின்களை, அவர் கொடியசைத்து வழியனுப்பி வைத்தார். அண்மையில் வெளிநாட்டுப் பயணத்தின் போது தாம் சந்தித்த உலகத் தலைவர்கள் பலரும், இந்தியாவின் துரிதமான வளர்ச்சியை வியந்து, உலகின் 3ஆவது பெரிய பொருளாதாரமாக இந்திய மேம்பட விருப்பம் வெளியிட்டதாக அவர் கூறினார். இந்தியாவில் கடந்த 11 ஆண்டுகளில், 25 கோடி மக்கள் வறுமையை வெற்றி கொண்டுள்ளதாகவும், இவர்களில் 3.75 கோடி பேர், பீகாரைச் சேர்ந்தவர்கள் என்றும் பிரதமர் தெரிவித்தார்.

--------------------------

*மோடி ஒடிசா* (14)

பிரதமர் திரு. நரேந்திர மோடி இன்று மாலை, ஒடிசா மாநிலம் புவனேஸ்வரில், முதலமைச்சர் திரு. மோகன் சரண் மாஜி தலைமையிலான, முதலாவது பிஜேபி அரசின் ஓராண்டு நிறைவு விழாவில் கலந்து கொள்கிறார். முன்னதாக விமான நிலையத்தில் இருந்து, விழா மைதானம் வரை, சாலை பவனி ஒன்றையும் அவர் நடத்துகிறார். விழாவின் போது, பல்வேறு திட்டங்களை அவர் தொடக்கி வைத்து வேறு பல

திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டுகிறார். வேளாண்மை, நீர்ப்பாசனம், சாலை, குடிநீர், மற்றும், சுகாதாரத் துறை தொடர்பான இத்திட்டங்களின் மொத்த மதிப்பு, 18 ஆயிரத்து 600 கோடி ரூபாயாகும். 2036ஆம் ஆண்டிற்கான ஒடிசா தொலை நோக்குப் பார்வை ஆவணத்தையும் பிரதமர் வெளியிடுகிறார். நாட்டின் முதலாவது மொழிவாரி மாகாணமாக, 1936-ல், ஒரிசா மாகாணம் உருவாக்கப் பட்டதன் நூற்றாண்டு விழாவின் போது, ஒடிசா மாநிலம் எட்டி இருக்க வேண்டிய வளர்ச்சி குறித்து, பல்வேறு தொலை நோக்குத் திட்டங்கள் இந்த ஆவணத்தில் இடம்பெறுகின்றன.

--------------------------

*கூட்டுறவு (11)*

அனைவருக்கும் நலவாழ்வு என்பதே கூட்டுறவின் சாரம் என்றும், பல்லாயிரம் ஆண்டுகளாக, இந்திய மண்ணில் வேரூன்றி உள்ள உணர்வு இதுதான் என்றும், மத்திய வேளாண் அமைச்சர் திரு. சிவ்ராஜ் சிங் சவுகான் கூறியுள்ளார். சர்வதேச கூட்டுறவு ஆண்டை ஒட்டி இன்று மும்பையில் நடைபெற்ற தேசிய கருத்தரங்கில் பேசுகையில் அவர் இவ்வாறு கூறினார். வேளாண்சார் தொழில்களை ஊக்குவிப்பதன் மூலம் விவசாயிகளின் வருமானத்தை உயர்த்தவும், நீடித்த வேளாண்மை மூலம், சுற்றுச் சூழல் சமநிலையை பேணவும், அரசு பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருவதாக, அமைச்சர் தெரிவித்தார். உணவுப் பாதுகாப்பு, அனைவருக்கும் ஊட்டச் சத்து ஆகியவற்றுடன், பூமியின் ஆரோக்கியத்தை பேணவும், அரசு முக்கியத்துவம் அளித்து வருவதாக, அவர் மேலும் குறிப்பிட்டார்.

--------------------------

*யோகா-விசாகப்பட்டினம் 1* (8)

11ஆவது சர்வதேச யோகா தினத்தை ஒட்டி, பிரதமர் திரு. நரேந்திர மோடியின் பங்கேற்புடன், ஆந்திர மாநிலம் விசாகப்பட்டினத்தில் நாளைக் காலை நடைபெற உள்ள பிரதான விழாவிற்கான ஏற்பாடுகள், முழு அளவில் செய்யப்பட்டு வருகின்றன. இவ்விழாவில் இடம்பெறும் யோகா அமர்வில், **யோகா மூலம் நலவாழ்வு மற்றும் ஒற்றுமை** என்பதில் நாட்டிற்கு உள்ள உறுதிபாட்டை வெளிப்படுத்தும் வகையில், இதுவரை இல்லாத சாதனை எண்ணிக்கையில், யோகா ஆர்வலர்கள் பங்கேற்க உள்ளனர். இது குறித்து கூடுதல் விவரங்கள்….

**(வாய்ஸ்)**

*யோகா-விசாகப்பட்டினம்* 2 (11)

**(வாய்ஸ்)**

விசாகப்பட்டினம் யோகா விழா மூலம், 2 கின்னஸ் சாதனைகள், மற்றும், வேறு 22 உலக சாதனைகளை படைக்கும் இலக்குடன், ஆந்திர அரசு செயல்பட்டு வருகிறது. இதன் ஒருபகுதியாக, இன்று மாலை 25 ஆயிரம் பழங்குடியின மாணவர்கள், 108

நிமிடங்களில், 108 சூரிய நமஸ்காரம் செய்யும் சாதனையில் ஈடுபடுகிறார்கள். மத்திய ஆயுஷ் துறை அமைச்சகத்துடன் இணைந்து மேற்கொள்ளப்படும் விழா ஏற்பாடுகளை, ஆந்திர முதலமைச்சர் திரு. சந்திரபாபு நாயுடு இன்று, மறு ஆய்வு செய்தார். இது அல்லாது, நாளை மத்திய கலாச்சாரத் துறை அமைச்சகம் சார்பிலும், நாட்டின் 100 முக்கிய சுற்றுலாத் தலங்கள், மற்றும், 50 முக்கிய மரபுச் சின்னங்களிலும், யோகா அமர்வுகளுக்கு ஏற்பாடு செய்யப் பட்டுள்ளது. கொனார்க் சூரியனார் கோவில், தஞ்சை பெரிய கோவில் ஆகிய இடங்களும் இதில் அடங்கும்.

-------------------------

*யோகா-புதுச்சேரி (7)*

புதுச்சேரியில் நாளை சர்வதேச யோகா தினத்தை கொண்டாட பல்வேறு ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன. புதுச்சேரியில் உள்ள **மண்டல சித்த மருத்துவ ஆராய்ச்சி கழகம்**, கொண்டாட்டம் குறித்த மத்திய-மாநில அரசுகளின் பல்வேறு நிகழ்ச்சிகளை ஒருங்கிணைப்பதற்கான மைய ஏஜென்சியாக செயல்பட்டு வருகிறது. கொண்டாடங்களின் முக்கிய பகுதியாக, புதுச்சேரியில் பல்கலைக்கழகம் உட்பட 4 இடங்களில் **யோகா சங்கம்** நிகழ்ச்சிகளுக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

-------------------------

*சாகசப் பயணம்* (16)

புதுச்சேரிக்கும், காரைக்காலுக்கும் இடையே, மொத்தம் 320 கிலோ மீட்டர் தொலைவிற்கு, பாய்மரப் படகில் கடல் சாகசப் பயணம் மேற்கொண்டு திரும்பி உள்ள என்சிசி கடற்படைப் பிரிவு மாணவ-மாணவிகளை இன்று தேங்காய்த்திட்டு துறைமுகத்தில், துணை நிலை ஆளுநர் திரு. கைலாஷ்நாதன் வரவேற்று வாழ்த்தினார். தேசிய மாணவர் படையின் சாகசங்கள், கடல் சாகசப் பயணத்தின் வழித்தட விவரங்கள், மாணவர்களின் பயிற்சி மற்றும் சமூக சேவை செயல்பாடுகள் குறித்து, துறைமுக வளாகத்தில் அமைக்கப்பட்டு இருந்த கண்காட்சி ஒன்றையும் அவர் பார்வையிட்டார். **சாகர் சங்க்ராம்** என்ற பெயரில், 25 மாணவிகள் உட்பட 60 பேர் மேற்கொண்ட, இந்த 10 நாள் பயணத்தில், 3 கடற்படை அதிகாரிகள் மற்றும் 2 என்சிசி அலுவலர்களும் பங்கேற்றனர். புதுச்சேரியில் இருந்து, கடலூர், பரங்கிபேட்டை, பூம்புகார் வழியாக, காரைக்கால் சென்றடைந்து, அதே வழியில் புதுச்சேரி திரும்பியுள்ள என்சிசி கடல் சாகசக் குழுவினரை வரவேற்கும் நிகழ்ச்சியில், சட்டமன்ற உறுப்பினர் திரு. பாஸ்கர், மீன்வளத் துறை இயக்குநர் திரு. முகமது இஸ்மாயில், மற்றும், இதர அதிகாரிகளும் கலந்து கொண்டனர்.

-------------------------

*மீனவர்-ரங்கசாமி* (8)

புதுச்சேரியில் மீன்வளத் துறை மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட 6 மீனவர்களுக்கு, 50 சதவிகித மானிய விலையில், ஃபைபர் கட்டுமரங்களையும், 21 மீனவர்களுக்கு,

இயந்திரம் பொருத்தத் தகுந்த ஃபைபர் படகுகளையும் இன்று முதலமைச்சர் திரு. ரங்கசாமி வழங்கினார். கருவடிக்குப்பம் காமராஜர் மணிமண்டபத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் சட்டப் பேரவைத் தலைவர் திரு. ஆர். செல்வம், மீன்வளத் துறை அமைச்சர் திரு. லட்சுமி நாராயணன், சட்டமன்ற உறுப்பினர்கள் திரு. பாஸ்கர் என்கிற தட்சணாமூர்த்தி-திரு. ஏ.கே.டி ஆறுமுகம், மற்றும், அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

-------------------------

*பெக்-விண்ணப்பம் (11)*

புதுச்சேரி தொழில்நுட்ப பல்கலைக் கழகத்தில், எம்.டெக், எம்சிஏ உள்ளிட்ட முதுகலை படிப்புகளில் சேர விரும்புவோரிடம் இருந்து, ஜூன் 1 முதல், 15ஆம் தேதி வரை, விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும் என பல்கலைக்கழக நிர்வாகம் அறிவித்துள்ளது. முழு நேர, மற்றும், பகுதி நேர பிஹெச்டி ஆராய்ச்சி படிப்புகளில் சேர விரும்புவோர், ஜூலை 4 வரை, இணைய தளம் மூலம் விண்ணப்பிக்கலாம் என்றும், தகுதி உள்ளவர்களுக்கான நுழைவுத் தேர்வு, ஜூலை 19ஆம் தேதி நடைபெறும் என்றும் அறிவிக்கப் பட்டுள்ளது. டிப்ளமா முடித்து, லேட்டரல் எண்ட்ரி முறையில் இரண்டாம் ஆண்டு பி.டெக் வகுப்பில் சேர விரும்புவோர், இம்மாதம் 26ஆம் தேதி வரை, சென்டாக் மூலம் விண்ணப்பிக்கலாம் என்றும், புதுச்சேரி தொழில்நுட்ப பல்கலைக்கழகம் அறிவித்துள்ளது.

-------------------------

*வானிலை (12)*

மேற்கு திசை காற்றின் வேக மாறுபாடு காரணமாக, வரும் 26 ஆம் தேதி வரை, தமிழகத்திலும், புதுச்சேரி-காரைக்கால் பகுதிகளிலும், லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும் என சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. வெப்பநிலையும், ஈரப்பதமும் அதிகமாக இருக்கும் நிலையில், ஒரு சில இடங்களில் அசௌகரியம் ஏற்படலாம் என்றும் வானிலை அறிக்கையில் தெரிவிக்கப் பட்டுள்ளது. சூறாவளி காற்றுக்கு வாய்ப்பு அதிகம் உள்ள வங்கக் கடல் பகுதிகள் மற்றும் அரபிக் கடல் பகுதிகளுக்கு மீனவர்கள் செல்ல வேண்டாம் என அறிவுறுத்தப் பட்டுள்ளனர். இதற்கிடையே, கடந்த 24 மணி நேரத்தில் தமிழகத்தில் ஓரிரு இடங்களில் மழை பெய்துள்ளது. அதிகபட்சமாக, நீலகிரி மாவட்டம் நடுவட்டம், கோவை மாவட்டம் சோலையார் ஆகிய இடங்களில் தலா 3 செ.மீ மழை பதிவாகி உள்ளது.

-------------------------

*ஹாக்கி* (7)

சென்னையில் நடைபெறும் மாஸ்டர்ஸ் கோப்பைக்கான **ஹாக்கி இண்டியா** போட்டித் தொடரின் மகளிர் பிரிவில், இன்று நடைபெற்ற, ஏ பிரிவு போட்டி ஒன்றில், ஹிமாச்சல் அணி, கேரள அணிக்கு எதிராக, வெற்றி பெற்றது. ஆடவர் ஏ பிரிவில் ஆந்திரா மற்றும் கேரளா அணிகளுக்கு இடையே நடைபெற்ற போட்டி, டிராவில்

முடிவடைந்தது. ஆடவர் பி பிரிவில் இன்று நடைபெறும் மற்றொரு போட்டியில், ஒடிசா-பஞ்சாப் அணிகள் மோதுகின்றன.

--------------------------

*நக்சலைட்* (11)

சத்தீஸ்கர் மாநிலம், **காங்கேர்** மாவட்ட வனப் பகுதிகளில், இன்று, ஒரு **பெண் நக்சலைட்டை**, பாதுகாப்புப் படையினர் என்கவுண்டரில் சுட்டுக் கொன்றனர். இப்பகுதியில் நக்சலைட் நடமாட்டம் இருப்பதாக, உளவுத் தகவல் பெறப்பட்டதை தொடர்ந்து, பாதுகாப்புப் படையினர் மேற்கொண்ட தேடுதல் வேட்டையின் போது இந்த மோதல் ஏற்பட்டது. பாதுகாப்புப் படையினரின் தேடுதல் வேட்டை தொடர்கிறது. இதற்கிடையே, சத்தீஸ்கரில் இருந்து, தடை செய்யப்பட்ட சிபிஐ மாவோயிஸ்ட் அமைப்பினர் 12 பேர் இன்று தெலங்கானா மாநிலம் கொத்தகூடம் மாவட்டத்தில் போலீசாரிடம் சரணடைந்தனர். இம்மாவட்டத்தில் இவ்வாண்டு இதுவரை, 294 மாவோயிஸ்ட்டுகள் சரணடைந்து இருப்பதும் குறிப்பிடத்தக்கது.

--------------------------

வாழ்வின் எல்லாத் துறைகளிலும் மாற்றுத் திறனாளிகளை ஊக்குவிக்க வேண்டியதன் அவசியத்தை, குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு வலியுறுத்தி உள்ளார்.

தேசிய ஜனநாயகக் கூட்டணி, வளர்ச்சியின் சின்னமாகவே திகழ்வதாக, பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார்.

பிரதமர் திரு. நரேந்திர மோடியின் பங்கேற்புடன், விசாகப்பட்டினத்தில் நாளை நடைபெற உள்ள, சர்வதேச யோகா தின விழாவிற்கான ஏற்பாடுகள், முழு அளவில் செய்யப்பட்டு வருகின்றன.

புதுச்சேரிக்கும், காரைக்காலுக்கும் இடையே, கடல் சாகசப் பயணம் மேற்கொண்டு திரும்பி உள்ள என்சிசி குழுவினரை, இன்று துணை நிலை ஆளுநர் திரு. கைலாஷ்நாதன் கொடியசைத்து வரவேற்றார்.